# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 09.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ ்தர், இகாப (ஓய்வு)**

**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். SA 12163/SCIC/2022

THIRU D. SOUNDARA RAJAN
No.5. MANTHI AMMAN KOIL STREET — மேல்முறையீட்டாளர்
MANGADU & POST
CHENNAI - 600 122.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
அரசு சார்புச் செயலாளர்
பொது (S.C)த் துறை ....... பொதுஅதிகார அமைப்பு
தலைமைச் செயலகம்
சென்னை-600 009.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 07.03.2022 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 19.05.2022 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 21.04.2022 |
| 4. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 11.07.2022 |
| 5. | ஆணையத்தின் அறிவிப்பு | 08.08.2022 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 27.08.2022 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 08.04.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / முதன்மைச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "Ref: My Crucial application to Hon'ble CM/TN dated 11/06/2021 & 11/08/2021 - regarding - As above said Ref.1. I would like to know what actions have been done ? Furnish the details with appropriate exhibits records….." என்பன போன்று 3 (மூன்று) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (09/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி/செல்வி.E.அமுதா, மி.க. சார்புச் செயலாளர், பொது (மி.க.)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை அவர்கள் ஆஜரானார். மனுதாரர் தனது 11/06/2021 மற்றும் 11/08/2021 தேதிகளிட்ட மனுக்கள் மற்றும் இன்னொரு மனு ஆகியவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினைக் கோரியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரால் 19/05/2022 தேதியிட்டு அனுப்பப்பட்ட பதிலில் 07/03/2022 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு, தமது அலுவலகத்திற்கு கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவித்துள்ளார். மீண்டும், பொதுத் தகவல் அலுவலர் 27/08/2022 தேதியிட்ட கடிதம் வாயிலாக தெரிவித்துள்ள பதிலில், மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனுவோடு, மனுதாரரின் 6(1)-ன் கீழான மனு கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும், பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கையில், 27/08/2022 தேதியிட்ட கடிதத்தில் மனுதாரரால், தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவில் குறிப்பிட்ட மூன்று மனுக்களும் தமது அலுவலகத்திற்கு கிடைக்கப் பெறவில்லை எனத் தெரிவித்ததோடு, மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை, மேல்முறையீட்டு அலுவலர், உள் துறைக்கு 27/06/2022 தேதியிட்டு அனுப்பியதோடு, அதன் நகலை மனுதாரருக்கு அனுப்பியதாகவும், ஆனால், அக்கடிதம் அஞ்சல் துறையினரால் 'unclaimed' என குறிப்பெழுதப்பட்டு, தமது அலுவலகத்திற்கு திருப்பப்பட்டுள்ளது எனத் தெரிவித்து உள்ளதாகவும் குறிப்பிட்டார். அதற்கு மனுதாரர், தனது முதல் மேல்முறையீட்டு மனுவின், பார்வைப் பத்தியில் 07/03/2022 தேதியிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்ட மனு, பொதுத் தகவல் அலுவலர், அலுவலகத்தில் 09/03/2022 தேதியிட்டு பட்டுவாடா செய்யப்பட்டது என தான் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவித்ததோடு, அக்கடிதம் பட்டுவாடா செய்யப்பட்டதற்கான சான்றாக அஞ்சல் ஒப்புகை அட்டையினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.**

**3. இந்நிலையில், இவ்வழக்கு பிறிதொரு தேதிக்கு ஆணையம் ஒத்தி வைக்கிறது. ஆணையத்தின் அடுத்த விசாரணைக்கு (1) மனுதாரர், (2) பொதுத் தகவல் அலுவலர் / பொது (மி.க.)த் துறை (3) பொதுத் தகவல் அலுவலர் / உள் துறை, தலைமைச் செயலகம், சென்னை ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பப்பட வேண்டும்.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 12163/SCIC/2022</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
அரசு சார்புச் செயலாளர்
பொது (S.C)த் துறை
தலைமைச் செயலகம்
சென்னை-600 009.

**மேல்முறையீட்டாளர்**

THIRU D. SOUNDARA RAJAN
No.5. MANTHI AMMAN KOIL STREET
MANGADU & POST
CHENNAI - 600 122.

RG/PC